கருப்பு உடை அணிந்து திமுக எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்

▶ வக்பு வாரிய சட்ட திருத்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்பு உடை அணிந்து வந்திருந்த திமுக எம்பிக்கள் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

குஜராத்தில் பயங்கரம்

போர் விமானம் விழுந்து நொறுங்கியது

விமானி பலி, ஒருவர் காயம்

அகமதாபாத், ஏப்.4: குஜராத் மாநிலத்தில் பயிற்சியில் ஈடுபட்டு இருந்த ஜாகுவார் போர் விமானம் விபத்துக்குள்ளானது. இதில் விமானி ஒருவர் உயிரிழந்தார்.

குஜராத்தின் ஜாம்நகரில் விமானப்படையில் இருந்து ஜாகுவார் போர் விமானம் நேற்று முன்தினம் வழக்கம் போல் பயிற்சியில் ஈடுபட்டு இருந்தது. அப்போது திடீரென விமானத்தில் தொழில்நுட்பக்கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனால் விமானிகள் விமானத்தில் இருந்து வெளியேற முயற்சித்துள்ளனர். இந்நிலையில் கட்டுப்பாட்டை இழந்த போர் விமானம், சுவர்தா கிராமத்தில் திறந்த வெளி மைதானத்தில் விழுந்து நொறுங்கி தீப்பிடித்தது. தகவலறிந்து போலீசார் விரைந்து சென்று மீட்பு பணிகளை மேற்கொண்டனர். இந்த விபத்தில் படுகாயமடைந்த நிலையில் விமானி ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வக்பு வாரிய திருத்த மசோதா மாநிலங்களவையில் தாக்கல்

புதுடெல்லி, ஏப்.4: வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதா மக்களவையில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டு, 12 மணி நேர விவாதத்துக்குப்பின் நிறைவேறியது. இந்நிலையில் வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதாவை மாநிலங்களவையில் ஒன்றிய சிறுபான்மை விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தாக்கல் செய்தார். அப்போது மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் கருப்பு நிற உடை அணிந்து வந்திருந்தனர்.

மசோதாவை தாக்கல் செய்து பேசிய கிரண் ரிஜிஜு, "முன்மொழியப்பட்டுள்ள வக்பு வாரிய திருத்த மசோதாவுக்கு மதத்துடன் எந்த தொடர்பும் இல்லை. சொத்துகளுடன் மட்டுமே தொடர்புடையது. வக்பு வாரிய திருத்த மசோதா முஸ்லிம்களின் உரிமையை பறிக்காது. அது முஸ்லிம்களுக்கு எதிரானதல்ல. அவர்களின் மத உணர்வை புண்படுத்துவது அல்ல. மாறாக பெண்களுக்கு அதிகாரமளிப்பது, அனைத்து முஸ்லிம் பிரிவுகளையும் வக்பு வாரியத்தில் சேர்ப்பது, அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதை நோக்கமாக கொண்டது.

மேலும் வக்பு வாரியம் சொத்துகளை நிர்வகிக்க அல்ல, மேற்பார்வையிட மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 2004ம் ஆண்டில் 4.9 லட்சம் வக்பு சொத்துகள் இருந்தன. தற்போது அது 8.72 லட்சமாக அதிகரித்துள்ளது. நாட்டின் மிகப்பெரிய அளவிலான சொத்துகளை வக்பு வாரியம் வைத்துள்ளது.

அரசாங்கம் ஒரு நல்ல நோக்கத்துடன் இந்த மசோதாவை அறிமுகப்படுத்தி உள்ளது. அதன் பெயரில் எந்த பிரச்னையும் இருக்க கூடாது. எனவே வக்பு மசோதா ஒருங்கிணைந்த வக்பு மேலாண்மை அதிகாரமளித்தல் செயல்திறன் மற்றும் மேம்பாடு மசோதா என பெயர் மாற்றப்பட்டுள்ளது" என தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து மசோதா மீது விவாதம் நடைபெற்றது. அப்போது மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசினர்.

நாட்டில் 22 லட்சம் ஓட்டுனர்கள் பற்றாக்குறை

புதுடெல்லி, ஏப்.4: நாட்டில் 22லட்சம் ஓட்டுனர்கள் பற்றாக்குறை நிலவுவதாக ஒன்றிய போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி பேசியதாவது:

உலக வங்கியின் அறிக்கையின்படி இந்தியாவில் 22லட்சம் ஓட்டுனர்கள் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

நாட்டில் சரியான ஓட்டுனர் பயிற்சி வசதிகள் இல்லாததால் ஏராளமான விபத்துக்கள் நிகழ்வதோடு உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1.8லட்சம் பேர் சாலைவிபத்துக்களால் உயிரிழக்கின்றனர்.

இதில் பெரும்பாலானவை சரியான பயிற்சி பெறாத ஓட்டுனர்களால் ஏற்படுகின்றது. நாடு முழுவதும் ஓட்டுனர் பயிற்சி நிறுவனங்களை படிப்படியாக அமைப்பதற்காகவும், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 1600 பயிற்சி நிறுவனங்களை அமைப்பதற்காகவும் அரசு திட்டமிட்டுள்ளது. பயிற்சி நிறுவனங்களை அமைப்பதற்காக சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் ரூ.4,500 கோடி திட்டத்தை தொடங்கியுள்ளது. இதன் மூலமாக சுமார் 60லட்சத்துக்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படும்.

ஓட்டுனர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், பிராந்திய ஓட்டுனர் பயிற்சி மையங்கள் மற்றும் ஓட்டுனர் பயிற்சி மையங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கு பொருத்தமான திட்டங்களை அனுப்புமாறு அனைத்து மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு நிதின் கட்கரி தெரிவித்தார்.

வக்பு நில ஆக்கிரமிப்பு குற்றச்சாட்டை நிரூபிக்கா விட்டால்

அனுராக் தாக்கூர் பதவி விலக வேண்டும்

கார்கே காட்டம்

புதுடெல்லி, ஏப்.4: வக்பு நிலம் குறித்த தன் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கா விட்டால் அமைச்சர் அனுராக் தாக்கூர் பதவி விலக வேண்டும் என காங்கிரஸ் தலைவர் கார்கே வலியுறுத்தி உள்ளார்.

வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதா நேற்று முன்தினம் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாவுக்கு திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு இடையே இந்த மசோதா மீதான விவாதம் நடைபெற்றது.

அப்போது பேசிய ஒன்றிய அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர், "வக்பு வாரிய திருத்த மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக் குழு கூட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட வக்பு வாரிய ஊழல் குறித்த அறிக்கையில் காங்கிரஸ் தலைவர் கார்கே குடும்பத்தினர் பெயர் பட்டியல் இருப்பதாக" குற்றம்சாட்டினார். இது எதிர்க்கட்சிகளிடையே பெரும் சர்ச்சையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் மாநிலங்களவை நேற்று காலை அவைத்தலைவர் ஜகதீப் தன்கர் உரையுடன் தொடங்கியது.

அப்போது பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, "அனுராக் தாக்கூர் நேற்று என்மீது முற்றிலும் பொய்யான, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்தினார். அவரது குற்றச்சாட்டுகள் ஊடகம், சமூக வலைதளங்களில் வெளியாகி என் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி விட்டது.

நான் ஒரு தொழிலாளியின் மகன். காங்கிரசின் தொகுதி குழு தலைவர் பதவியில் இருந்து அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவிக்கு உயர நான் கடுமையாக உழைத்தேன். என் 60 ஆண்டுகால அரசியல் வாழ்வில் யாரும் என்னை நோக்கி இப்படியொரு குற்றம்சாட்டியதில்லை. என் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். என் பொது வாழ்க்கையில் உயர்ந்த மதிப்புகளை நான் எப்போதும் நிலைநிறுத்தி உள்ளேன்.

வக்பு வாரிய நிலத்தின் ஒரு அங்குலத்தை கூட நானோ, என் குடும்பத்தினரோ அபகரிக்கவில்லை. தாக்கூர் என் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபித்தால் நான் ராஜினாமா செய்கிறேன். குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாவிட்டால் தாக்கூர் பதவியில் தொடர தகுதி இல்லை. அவர் ராஜினாமா செய்ய வேண்டும்" என காட்டமாக வலியுறுத்தினார்.

4000 சதுர கிமீ நிலத்தை சீனா ஆக்கிரமித்துள்ளது

மக்களவையில் ராகுல்காந்தி குற்றச்சாட்டு

புதுடெல்லி, ஏப்.4: மக்களவையில் நேற்று எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி பேசுகையில்,' இந்தியா மற்றும் சீனாவின் இராஜதந்திர உறவுகளின் 75 வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறார்கள். நம்முடைய நிலப்பரப்பின் 4,000 சதுர கிலோமீட்டர் பரப்பில் சீனா அமர்ந்திருக்கிறது. நமது வெளியுறவுச் செயலர் சீனத் தூதருடன் கேக் வெட்டிக் கொண்டிருந்ததைக் கண்டு நான் சிறிது நேரம் அதிர்ச்சியடைந்தேன். கேள்வி என்னவென்றால், சீனா ஆக்கிரமித்துள்ள இந்த 4,000 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பில் உண்மையில் என்ன நடக்கிறது?. கல்வானில் 2020ல் 20 ஜவான்கள் வீரமரணம் அடைந்தனர். கேக் வெட்டி அவர்களின் தியாகத்தை வெளியுறவுத் துறை கொண்டாடியது. நாங்கள் இயல்பு நிலைக்கு எதிரானவர்கள் அல்ல, ஆனால் அதற்கு முன் உரிய நிலைமை இருக்க வேண்டும். எங்கள் நிலத்தை மீட்டெடுக்க வேண்டும். ஆனால் சீன மக்களுக்கு குடியரசு தலைவர் மற்றும் பிரதமர் கடிதம் எழுதியது எனது கவனத்திற்கு வந்துள்ளது. சீன தூதர் தான் இந்திய மக்களிடம், பிரதமரும் குடியரசு தலைவரும் கடிதம் எழுதியுள்ளனர் என்று கூறுகிறார். மறுபுறம் எங்கள் நட்பு நாடான அமெரிக்கா திடீரென எங்கள் மீது வரி விதிக்க முடிவு செய்துள்ளது. நம் மீது சுமத்தியுள்ள இந்த கட்டணங்கள் குறித்து என்ன செய்யப்படும் என்பதற்கு இந்திய அரசு பதில் அளிக்க வேண்டும்' என்றார்.

மோடி பிரதமராக இருப்பது அதிர்ஷ்டம்

ராகுல்காந்தி பேச்சுக்கு பாஜ எம்பி அனுராக் தாக்கூர் கூறுகையில்,'அக்சாய் சின் பகுதியை சீனா யாருடைய ஆட்சியில் ஆக்கிரமித்தது?இந்தி-சீனி பாய் பாய் என்று பேசிக்கொண்டே எங்கள் முதுகில் குத்தினார்கள். டோக்லாம் நேரத்தில் சீன அதிகாரிகளிடம் சீன சூப் சாப்பிட்டு இந்திய ராணுவத்தினருடன் நிற்காமல் இருந்த தலைவர் யார்?. சீன அதிகாரிகளிடம் பணம் வாங்கிய அறக்கட்டளை எது? ராஜீவ் காந்தி அறக்கட்டளை மூலம் எதற்காக பணம் எடுத்தார்கள்? ஆனால் மோடி ஆட்சியில், டோக்லாமில் இந்திய ராணுவம் தகுந்த பதிலடி கொடுத்தது என்று சொல்லலாம். பிரதமர் எல்லைக்கு சென்று ராணுவ வீரர்களின் மன உறுதியை உயர்த்தினார். பாதுகாப்பு அமைச்சரும் சென்றார். ஒரு அங்குல நிலத்தை கூட யாராலும் கைப்பற்ற முடியவில்லை. சிலர் தங்கள் அரசியல் ஆதாயத்திற்காக சீனாவுடன் கூட்டு சேர்ந்து பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றனர்' என்றார்.

பாஜ எம்பி நிஷிகாந்த் துபே, 'இந்த நாட்டின் பிரதமர் நரேந்திர மோடியாக இருப்பது நாட்டின் அதிர்ஷ்டம். அமெரிக்க அதிபர் மோடியை நண்பர் என்கிறார். ஆஸ்திரேலிய பிரதமர் அவரை முதலாளி என்று அழைக்கிறார், பப்புவா நியூ கினியா பிரதமர் அவரது கால்களைத் தொடுகிறார். இது தான் நிலைமை. உங்களைப் போன்ற பலவீனமான பிரதமர் ஆட்சிக்காலத்தில், திபெத் சீனாவுக்கு கொடுக்கப்பட்டது. இந்திரா காந்தி கச்சத்தீவு இலங்கைக்குக் கொடுத்தார். உங்களைப் போன்ற பலவீனமான பிரதமரை கொண்டவர்களுக்கு இது தற்போது நேருவின் நாடு அல்ல. நாம் சீனாவுக்கு ஒரு அங்குலம் கூட கொடுக்கவில்லை. பிரதமர் மோடி எங்கள் பிரதமர் என்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம், உலகம் முழுவதும் அவருக்கு தலைவணங்குகிறது' என்றார்.

மேற்கு வங்கத்தில்

25,753 ஆசிரியர்கள் பணிநீக்கம் உறுதி

உச்சநீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, ஏப்.4: மேற்கு வங்க மாநிலத்தில் கடந்த 2016ம் ஆண்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாநில பள்ளிக்கல்வித்துறை மூலமாக ஆசிரியர் பணி நியமனம் நடைபெற்றது. 24ஆயிரத்து 640 ஆசிரியர் பணியிடங்களுக்கு 23லட்சம் பேர் தேர்வு எழுதினார்கள். இதில் 25ஆயிரத்து 753 பேருக்கு பணி நியமன ஆணையை அரசு வழங்கியது. இந்த ஆசிரியர் பணி நியமனத்தில் முறைகேடு நடந்துள்ளதாக கூறி கொல்கத்தா உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் கடந்த ஆண்டு ஏப்ரலில் 25,753பேரின் பணி நியமனத்தையும் ரத்து செய்து உத்தரவிட்டு இருந்தது.

இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் 127 பேர் மேல்முறையீடு செய்தனர். இந்த வழக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா மற்றும் நீதிபதி சஞ்சய் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் அமர்வு, "தேர்வின் நம்பகத்தன்மை மற்றும் சட்டபூர்வமான தன்மை நீர்த்துப்போகச் செய்யப்பட்டுள்ளது. முழு தேர்வு செயல்முறையும் மோசமானது மற்றும் களங்கமானது.

2024ம் ஆண்டு ஏப்ரல் 22ம் தேதி 25753 பேரின் பணி நியமனங்களை ரத்து செய்த கொல்கத்தா உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு உறுதி செய்யப்படுகின்றது. மனிதாபிமான அடிப்படையில் சில மாற்றுத்திறனாளி ஊழியர்களுக்கு தளர்வு அளிக்கப்பட்டு அவர்கள் பணியில் நீடிப்பார்கள். அரசு மூன்று மாதங்களில் புதிய தேர்வு செயல்முறையை தொடங்க வேண்டும்" என்று உத்தரவிட்டது.

நாடாளுமன்ற ஒப்புதலின்றி

கச்சத்தீவை இலங்கைக்கு விட்டு கொடுத்தது அரசியலமைப்புக்கு எதிரானது

மக்களவையில் டி.ஆர்.பாலு குற்றச்சாட்டு

புதுடெல்லி, ஏப்.4: மக்களவையில் நேற்று பூஜ்ய நேரத்தில் பேசிய டி.ஆர். பாலு, "தமிழக சட்டப்பேரவையில் கடந்த புதன்கிழமை(ஏப்.2) கச்சத்தீவை மீட்டெடுப்பது தொடர்பான ஒரு தீர்மானத்தை முதலமைச்சர் ஸ்டாலின் கொண்டு வந்து, அது ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய டி.ஆர்.பாலு, "கச்சத்தீவை கடந்த 1974 மற்றும் 1976ம் ஆண்டுகளில் ஒரு ஒப்பந்தம் இலங்கைக்கு இந்தியா வழங்கியது.

நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்காமல் நிலப்பகுதியை விட்டு கொடுக்க கூடாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆனால் 1976ல் மாநில அரசு அல்லது நாடாளுமன்றத்தை கலந்தாலோசிக்காமல், நாடாளுமன்ற ஒப்புதலின்றி கச்சத்தீவை இலங்கைக்கு விட்டு கொடுத்தது அரசியலமைப்புக்கு எதிரானது. அதை விரைவாக மீட்டெடுக்க வேண்டும்" என வலியுறுத்தினார்.

டெல்லி- என்சிஆர் பகுதிகளில்

பட்டாசுகள் மீதான தடைகளை தளர்த்த உச்சநீதிமன்றம் மறுப்பு

புதுடெல்லி, ஏப்.4: டெல்லி மற்றும் அதன் தலைநகர் பிராந்தியத்தில்(என்சிஆர்) குளிர்காலங்களில் காற்றின் மாசுபாடு அதிகமாக இருக்கும். மாசு குறைபாட்டுக்கு பட்டாசுகள் வெடிப்பதும் ஒரு காரணம் என மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்த அறிக்கையின்படி பட்டாசுகள் உற்பத்தி, சேமித்து வைப்பது மற்றும் விற்பனை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், பட்டாசுகள் வெடிக்க விதிக்கப்பட்ட தடையை விலக்க கோரி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் அபய் எஸ்.ஓகா மற்றும் உஜ்ஜால் புயன் அடங்கிய அமர்வு, மக்கள் தொகையில் பெரும்பாலானவர்கள் தெருக்களில் பணிபுரிகின்றனர். காற்று மாசுபாட்டினால் அவர்களுக்கு கடுமையான பாதிப்பு ஏற்படுகிறது.

ஒவ்வொருவரும் அவர்களுடைய வீட்டிலோ, வேலை செய்யும் இடத்திலோ காற்று சுத்திகரிப்பானை வாங்கி வைப்பதற்கான வசதியும் இல்லை. அரசியல் சட்டம் பிரிவு 21ன்படி சுகாதாரத்துக்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதே போல் மாசுபாடு அற்ற நிலையில் வாழ்வதற்கான உரிமை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பட்டாசுகள் மீதான தடையில் தளர்வு அளிக்க முடியாது என்று கூறினர்.

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
மின்னணு முறையிலான குறுகிய கால அழைப்பு
ந.க.எண்.DRDKPM249/2024/அ10 நாள்-02.04.2025
அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் II - 2025-2026-ன் வாயிலாக காஞ்சிபுரம் மாவட்டத்திலடங்கிய 5 ஊராட்சி ஒன்றியங்களிலும் 55 கிராம ஊராட்சிகள் 187 பணிகளுக்கான குறுகிய கால ஒப்பந்த அழைப்புகள் தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) மூலம் கோருதல்
1. ஒப்பந்த அழைப்பிற்கான தோராய மதிப்பீடு ரூ.0.30 இலட்சம் முதல் ரூ.41.18 இலட்சம்
2. செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்புத் தொகை குறித்தான விவரங்கள் தொடர்புடைய ஒப்பந்த படிவங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. ஒப்பந்த நமூனாக்களை மின்னணு கொள்முதல் முறையில் www.tntenders.gov.in என்னும் இணையதளத்தில் 04.04.2025 முதல் 16.04.2025 வரையிலான காலத்தில் பதிவேற்றம் செய்யலாம்.
4. ஒப்பந்த நமூனா இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய இறுதி நாள் மற்றும் நேரம் 16.04.2025 பி.ப. 3.00 மணி வரை
5. ஒப்பந்த நமூனாக்கள் தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) மூலம் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்படும் நாள் 16.04.2025 மற்றும் நேரம் பி.ப. 4.00 மணி முதல்.
6. முழுமையான விவரங்கள் சம்மந்தப்பட்ட ஒப்பந்த நமூனாக்களில் www.tntenders.gov.in என்றும் இணையதளத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.
வெ.ஆ.எண்.023/செ.ம.தொ.அ./2025, காஞ்சி, 03.04.25
இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், மா.ஊ.வ.முகமை, காஞ்சிபுரம்

டாடா கேபிடல் லிமிடெட்
பதிவு முகவரி: டவர் A, 11ஆவது தளம், பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை 400013.
கிளை முகவரி: 1வது தளம், நூற்றாண்டுச் சதுக்கம், 6A டாக்டர். அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை 600024.
அசையாச் சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8 (6) மற்றும் 9(1) கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.
கடன் கணக்கு எண்.: TCFLA0404000010930902 மற்றும்
TCFLA0404000011006164: திருமதி B மேரி பில்லிஸ்
டாடா கேபிடல் லிட். (TCL) என்பது வங்கியல்லாத நிதிநிறுவனமாகும். நிறுவனங்கள் சட்டம்,1956–ன் விதிகளின் கீழ் இணைக்கப்பட்டது. மேலும் பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, டவர் A, 11ஆவது தளம், கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013 என்ற முகவரியில் பதிவு அலுவலகமும் அதன் கிளை அலுவலகங்களில் ஒன்று சென்னையில் (தமிழ்நாடு) ("கிளை") உள்ளது. டாடா கேபிடல் பைனான்சியல் சர்வீஸஸ் லிமிடெட் ("TCFSL") நிறுவனம் மற்றும் டாடா கிளீன்டெக் கேபிடல் லிமிடெட் ("TCCL") நிறுவனம் ஆகியவற்றிற்கு இடையிலான ஏற்பாடு திட்டத்திற்கு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் (NCLT), மும்பை முழுமையான அனுமதி வழங்கிய 24.11.2023 தேதியிட்ட ஆணைக்கு இணங்கவும், நிறுவனங்கள் சட்டம் 2013 (கூறப்பட்ட திட்டம்) விதிகளின்படி பிரிவுகள் 230 லிருந்து 232 வரை மற்றும் பிரிவு 66 மற்றும் பொருந்தக் கூடிய பிற பிரிவுகளின்படியும் இவை மாற்றித் தரக்கூடியவையாகவும் டாடா கேபிடல் லிமிடெட் மாற்றித்தரப்பட்டதற்கு உரியதாகவும் உள்ளது, அதன் அடிப்படையில் TCFSL மற்றும் TCCL (மாற்றித்தரக்கூடிய நிறுவனங்கள்) ஆகியவை TCL ஆக மாற்றப்பட்டு அதன் தொடர்பாக அனைத்து சொத்துகள், சொத்துகள், உரிமைகள், பயன்கள், நலன்கள், கடமைகள், பொறுப்புகள், உடமைகள், ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், கடனீடுகள் முதலானவை 01.01.2024–தேதியிலிருந்து TCL– உடன் இணைக்கப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்ட உத்தரவு மற்றும் திட்டத்திற்கு இணங்க, அனைத்து TCFSL நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்ட அனைத்து பயன்பாட்டு ஆவணங்களும் மற்றும் அது தொடர்பாக நிலுவையில் உள்ள அனைத்தும் விண்ணப்பதாரர் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. எனவே அதன் அடிப்படையில் கடன்தாரர்கள் / உப கடன்தாரர்களிடமிருந்து TCL ஆனது கோருவதற்கு உரியதாகிறது.
இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப கடன்தாரர் ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் லிமிடெட் (கடனீட்டு கடனீந்தோர் / TCL) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் லிமிடெடின் (கடனீட்டு கடனீந்தோர்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் கவனதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, 'உள்ளது உள்ளவிட்டதில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது' அடிப்படையில் ஏப்ரல் 29, 2025 தேதியன்று விற்பனை செய்யப்பட உள்ளது.
அதேசமயம், கடனீட்டுச் சொத்தின் கீழ் பெறப்பட்ட கடனை வசூலிப்பதற்காக கடனீட்டுச் சொத்து விற்பனை செய்யப்படுகிறது. அதாவது, 02–ஏப்ரல்–2025 தேதிப்படி நிலுவைத் தொகை பொத்தம் ரூ.6,67,17,845/– (ரூபாய் ஆறு கோடியே அறுபத்தேழு லட்சத்து பதினேழாயிரத்து எண்ணூற்று நாற்பத்தைந்து மட்டும்) {அதாவது, கடன் கணக்கு எண். TCF–LA0404000010930902 –க்கு நிலுவையில் உள்ள ரூ.86,26,969/– மற்றும் கடன் கணக்கு எண். TCF–LA0404000011006164–க்கு நிலுவையில் உள்ள ரூ.5,80,90,876/–} தொகையை கடன்தாரர் மற்றும் உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள், அதாவது, (1) திருமதி B மேரி பில்லிஸ், க/பெ. திரு. பீட்டர் பெர்னாண்டஸ், எண். 18, கஸ்தூரி நகர், இரண்டாவது தெரு, கொரட்டூர், சென்னை, தமிழ்நாடு– 600080; (2) திரு. பீட்டர் பெர்னாண்டஸ், த/பெ. கிளிட்டஸ் பெர்னாண்டஸ், எண். 18, கஸ்தூரி நகர், இரண்டாவது தெரு, கொரட்டூர், சென்னை, தமிழ்நாடு– 600080.
இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு / விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேலே குறிப்பிட்ட சொத்தானது மேற்கூறிய 29 ஏப்ரல் 2025 தேதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் அதன் கிளை அலுவலகமான 1வது தளம், நூற்றாண்டுச் சதுக்கம், 6A டாக்டர். அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை 600024 எனும் முகவரியில் விற்பனை செய்யப்படும்.
மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத் தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது ஏப்ரல் 28, 2025 தேதி அன்று மாலை 5.00 மணி வரை, டாடா கேபிடல் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் பெற்றுக்கொள்ளப்படும்.

கடனீட்டுச் சொத்துகளின் விவரம்	சுவாதீனத்தின் வகை	நிர்ணய விலை (ரூ.)	முன்வைப்புத் தொகை EMD (ரூ.)
	ஆக்கப்பூர்வ/ கையக		
அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம் மற்றும் கட்டடம், நிலத்தின் மொத்தப் பரப்பளவு 4790 சதுர அடி, சர்வே எண்கள் 1071/1, 1071/2 & 1075, கொரட்டூர் கிராமம், மனை எண் 18, கஸ்தூரி நகர், II,ஆவது தெரு, கொரட்டூர், சென்னை, 600080 (01.07.2009 தேதியிட்ட விற்பனை ஆவண எண் 1831/2009–இல் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது). நிலத்தின் எல்லைகள்: வடக்கு: கஸ்தூரி நகர் 2ஆவது தெரு, தெற்கு: சத்யமூர்த்தி மற்றும் ராமமூர்த்தி ஆகியோரின் சொத்து, கிழக்கு: கண்ணய்யா ரெட்டியார் அவர்களின் மனை, மேற்கு: சண்முகம் மற்றும் ரங்கநாதன் ஆகியோரின் மனை. இத்துடன் தற்போதும் எதிர்காலத்திலும் அங்குள்ள கட்டடம் உட்பட. இது கொரட்டூர் சார்பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.	கையக	ரூ. 3,80,66,500 (ரூபாய் மூன்று கோடியே எண்பது லட்சத்து அறுபத்தாறாயிரத்து ஐந்நூறு மட்டும்)	ரூ. 38,06,650 (ரூபாய் முப்பத்தெட்டு லட்சத்து ஆறாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்)

விற்பனைக்கான சொத்தின் விவரங்கள் அட்டவணையில் உள்ளன. மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி அடமானசொத்துக்குள் அசையும் பொருட்கள்/ வீட்டில் உள்ளவை ஏதேனும் இருந்தால், விற்பனை அறிவிப்பில் குறிப்பாக விவரிக்கப்படும் வரை, கடனீட்டுச் சொத்துடன் விற்பனைக்கு உரியதாகாது. மேற்கூறிய நிலுவைத் தொகை, வட்டி மற்றும் செலவுகள்(விற்பனைக்கான செலவு உட்பட) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் வழங்கப்பட்டானோ, அல்லது மேற்கூறிய கடனீட்டுச் சொத்திற்கான நிறுவைத் தொகை, வட்டி மற்றும் செலவுகள் திருப்பிச் செலுத்தப்பட்டதற்கான சான்றுகளை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் திருப்திக்கு உகந்த வகையில் தந்தாலோ விற்பனை நிறுத்தப்படும். இதன்மூலம் பொதுமக்கள் தங்கள் டெண்டரை தனிப்பட்ட முறையில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எந்த அதிகாரியோ அல்லது விற்பனை நடவடிக்கையில் தொடர்புடைய எந்த பிற நபரோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏலத்தில் பங்கெடுக்கவோ, அல்லது சொத்தின் விற்பனையில் எந்த